THE CENTRAL LAW COLLEGE, LIBRARY ★ SALEM-636 008. ★

Register No. | | | | | | | | |

**FA6B**

5840–23

(For the candidates admitted from 2017 – 2018 onwards)

B.A. LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, NOVEMBER 2023.

(Five – year Regular Course)

Third Year – Sixth Semester

COMPANY LAW

Time : 2 ½ hours Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Briefly explain the theory of Independent corporate personality and when does the court allow lifting of the corporate veil.

   சுதந்திரமான வணிக நபர் கோட்பாட்டை சுருக்கமாக விளக்கி அதன் திரையை விலக்க நீதி மன்றம் எப்பொழுது அனுமதிக்கும்?

2. Explain the majority powers and minority rights and state its exceptions with decided cases.

   பெரும்பான்மையினரின் அதிகாரங்களையும் சிறுபான்மையினரின் உரிமைகளையும் விளக்கி அதன் விதிவிலக்குகளை முடிவு செய்யப்பட்ட வழக்குகளோடு குறிப்பிடுக.

3. Briefly examine the establishment of Securities and Exchange Board of India and its powers and functions.

   இந்திய பங்கு பரிவர்த்தனை வாரியத்தின் அமைப்பு, அதிகாரங்கள் மற்றும் பணிகளை பற்றி சுருக்கமாக ஆய்வு செய்க.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Examine the rules for the allotment of shares and point out when can a company cancel the allotment of shares.

   பங்குகள் வழங்குவது குறித்த விதிகளை ஆராய்ந்து எப்பொழுது ஒரு நிறுவனம் பங்கு ஒதுக்கீட்டை ரத்து செய்யலாம் என்பதை குறிப்பிடுக.

5. Explain the provisions relating to Articles of Association of a Company under the Companies Act, 2013.

ஒரு நிறுவனத்தின் செயல்முறை விதிகள் தொடர்பாக நிறுவனங்கள் சட்டம், 2013 கூறும் வகைமுறைகளை விளக்குக.

6. Explain the powers of Directors in a Company.

ஒரு நிறுவனத்தின் இயக்குநர்களின் அதிகாரங்களை விவரி.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக.

(a) One Man Company.

ஒரு நபர் நிறுவனம்.

(b) Prospectus.

திட்ட அறிவிக்கை.

(c) Defunct company.

செயலற்ற நிறுவனம்.

(d) Resolutions.

தீர்மானங்கள்.

(e) Capital clause.

மூலதனப் பகுதி.

(f) Bonus shares.

ஆதாயப் பங்குகள்.

(g) Peel's case.

பீல்ஸ் வழக்கு.

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. There were two directors in a company. They failed to agree to an application for a transfer. One was in favour of granting the transfer and the other refused to do so. The applicant sues the company – Decide by giving reasons.

ஒரு நிறுவனத்தில் இரண்டு இயக்குநர்கள் இருந்தனர். மாற்றம் கோரி செய்யப்பட்ட ஒரு விண்ணப்பத்திற்கு அவர்கள் ஒத்துப்போக இயலவில்லை. மாற்றத்திற்கு ஒருவர் ஆதரவு தெரிவிக்கிறார், மற்றொருவர் அவ்வாறு மாற்ற மறுக்கிறார். விண்ணப்பதாரர் நிறுவனத்திற்கு எதிராக வழக்கிடுகிறார். காரணங்கள் கூறி தீர்மானிக்க.



9. 'A' a shareholder, after appointing 'B' as his proxy at a meeting of the company, himself attended and voted on a particular resolution. 'B' there after claimed to exercise his vote. Examine the validity of his claim.

'அ' என்னும் பங்குதாரர் ஒருவர் 'ஆ' என்பவரை நிறுவனத்தின் ஒரு கூட்டத்திற்கு தனது மாற்றாளாக நியமனம் செய்த பிறகு தானே நேர்முகமாக கூட்டத்தில் கலந்து கொண்டு, ஒரு குறிப்பிட்ட தீர்மானத்தின் மீது வாக்களித்தார். இதன் பின்னிட்டு 'ஆ' என்பவர் தனது வாக்குரிமையை பயன்படுத்த வேண்டும் என்று கோரினார். அக்கோரிக்கையின் செல்லத்தக்க நிலை குறித்து ஆராய்க.

10. A company resolved and sought confirmation for shifting its registered office from Banglore to Ahmedhabad due to disturbance of certain employees. The employees strongly objected this. Discuss.

ஒரு நிறுவனம் தன்னுடைய நிறுவன ஊழியர்களின் பிரச்சனைகள் காரணமாக தன்னுடைய பதிவு அலுவலகத்தை பெங்களூரில் இருந்து அகமதாபாத்திற்கு மாற்றுவது என்று தீர்மானித்து ஒப்புதல் அளிக்கப்பட்டது. அவற்றை நிறுவன ஊழியர்கள் உறுதியாக எதிர்த்தனர். விவாதிக்க.